# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**<u>ஆணை நாள்.07.08.2026</u>**

**<u>முன்னிலை</u>**
**திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்.CP 000004/B/2026</u>**

திரு.M.ஸ்ரீதர் ... மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொது தகவல் அலுவலர்,
கோட்டப் பொறியாளர்(நெ),க&ப.,
சென்னை மாநகர சாலைகள்,
கோட்டம்-II, சென்னை-600106. ... பொது அதிகார அமைப்பு

பொது தகவல் அலுவலர்,
கோட்டப் பொறியாளர்(நெ), CMDP,
கோட்டம்-IV, ஆலந்தூர்,
சென்னை-600018.

பொது தகவல் அலுவலர்,
கோட்டப் பொறியாளர்(நெ),
திட்டங்கள் அலகு கோட்டம்-I,
குரோம்பேட்டை,
சென்னை-600044.

பொது தகவல் அலுவலர்,
தனி வட்டாட்சியர்(நி.எ.),IRR,
HRS Campus,
கிண்டி,
சென்னை-600025.

பொது தகவல் அலுவலர்,
தனி வட்டாட்சியர்(நி.எ.) அலகு-2,
நெடுஞ்சாலைத்துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை-600001.

## ஆணை

இவ்வழக்கின்மீது இவ்வாணையத்தால் (07.07.2026) அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து (07.08.2026) இன்று நடத்தப்பட்ட நேரடி விசாரணைக்கு பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி.புனிதவதி, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), சென்னை அவர்கள் ஆணையத்திற்கு நேரில் ஆஜராகி, ந.க.எண்.ஜே15/e-4378212/2026, நாள்.03.08.2026 தேதியிட்ட அறிக்கையினை ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்தார்.

2. மேற்கண்ட அறிக்கையில் சென்னை மாவட்டம், மாதவரம் வட்டம், மாதவரம் கிராமம், புல எண்.1414/4பி-ல் மனுதாரர் திரு.கேசவராயலு நாயுடு என்பவர் தனது ஆவணத்திற்கும் பட்டாவிற்கும் பரப்பளவு வேறுபாடு உள்ளதாகவும் அதனை திருத்தம் செய்யக்கோரி மனு அளித்தது தொடர்பாக உதவி இயக்குநர் (நில அளவை), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை அவர்களிடமிருந்து மீளறிக்கை பெற்ற பின்னர் மனுதாரரின் கோரிக்கையினை நிறைவேற்றி, அது தொடர்பான இறுதி நிலை குறித்து விரிவான அறிக்கையினை மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) அவர்கள் ஆணையத்திற்கு நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. மேலும், இந்நேர்வில், உதவி இயக்குநர்(நில அளவை) அவர்களிடமிருந்து வரப்பெற்ற ஆ4/1479/2026, நாள்.24.07.2026 தேதியிட்ட உதவி இயக்குநர் (நில அளவை) அவர்களின் அறிக்கையில் மேலும் சில குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளது. எனவே மீள அறிக்கையானது ந.க.எண்.ஜே15/4378212/2026, நாள்.03.08.2026 அலுவலக கடிதம் வாயிலாக கோரப்பட்டுள்ளது. எனவே இந்நேர்வில் மேற்படி அலுவலகத்தில் மீளறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் இறுதி ஆணை பிறப்பிக்கப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

3. இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

தகவல் சட்டம் 2005

**மேற்படி அலுவலகத்திலிருந்து மீளறிக்கை கோரவேண்டியுள்ளதால் 1 வார கால அவகாசம் தேவை என இன்றைய விசாரணைக்கு ஆஜரான மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), சென்னை அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க, இவ்வழக்கின் விசாரணையானது <u>19.08.2026 அன்று முற்பகல் 11.00 மணிக்கு</u> ஒத்திவைக்கப்படுகின்றது. 19.08.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), சென்னை அவர்கள் மனுதாரரின் கோரிக்கையினை நிறைவேற்றி, அதற்கான அறிக்கையினை ஆணையத்திற்கு நேரில் ஆஜராகி, சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகின்றது.**

**ஒம்/-(அ. விஜயராம்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

<u>வழக்கு எண். CP 000004/B/2026</u>

## பெறுநர்

1. மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்),
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   சென்னை- 600001.

2. வட்டாட்சியர் / கண்காணிப்பாளர்,
   நிலப் பிரிவு,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   சென்னை- 600001.

3. உதவி இயக்குநர் (நில அளவை),
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   சென்னை - 600001.

4. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   சென்னை- 600001.

5. பொது தகவல் அலுவலர்,
   வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
   வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
   வடசென்னை கோட்டம்,
   சென்னை- 600066.

6. பொது தகவல் அலுவலர்,
   தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   மாதவரம் வட்டம்,
   சென்னை- 600060.

7. பொது தகவல் அலுவலர்,
   கோட்டப் பொறியாளர்(நெ),க&ப.,
   சென்னை மாநகர சாலைகள்,
   கோட்டம்-II, சென்னை-600106.

8. பொது தகவல் அலுவலர்,
   கோட்டப் பொறியாளர்(நெ), CMDP,
   கோட்டம்-IV, ஆலந்தூர்,
   சென்னை-600018.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

9. பொது தகவல் அலுவலர்,
கோட்டப் பொறியாளர்(நெ),
திட்டங்கள் அலகு கோட்டம்-I,
குரோம்பேட்டை,
சென்னை-600044.

10. பொது தகவல் அலுவலர்,
தனி வட்டாட்சியர்(நி.எ.),IRR,
HRS Campus,
கிண்டி,
சென்னை-600025.

11. பொது தகவல் அலுவலர்,
தனி வட்டாட்சியர்(நி.எ.) அலகு-2,
நெடுஞ்சாலைத்துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை-600001.

12. மேல்முறையீட்டாளர்,
திரு.M.ஸ்ரீதர்,
எண்.7, ரங்கநாதன் தோட்டம்,
15-ஆவது மெயின் ரோடு,
அண்ணாநகர் மேற்கு,
சென்னை-600040.
செல்.7708049999.

Copy to: File. GP PC

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005